**கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 918,326 தொகை பெறுமதி யான மூலதன உதவியினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெற வேண்டிய மூலதன உதவியை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றில் சரி செய்வேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மாண வேலை செலவு ரூபா 110,030 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகளை சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றில் சரி செய்வேன். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபை க்குச் சொந்தமான ரூபா 300,000 தொகை பெறுமதியான காணிகள் மற்றும் ரூபா 813,523 தொகை பெறுமதியான கட்டிடங்களையும் கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றில் சரி செய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டண வருமானப் பதிவேடு மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணப் பேரேடுட்டு கணக்கு இடையே வித்தியாசமான ரூபா 1,399,018 தொகையினை இனங்காணாமல் முன்னைய ஆண்டுகளில் பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முத்திரை கட்டண வருமானம் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றில் சரி செய்வேன். |

## (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 8,901,952 தொகைக்கான 08 கணக்கு விடயங்களுக்கு உரிய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 1,693,537 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதிகளின் வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2006 ஆண்டு முதல் துணைப் பதிவேடு மற்றும் கணக்குகளிடையே ஏற்பட்டிருந்த மீதிகளில் காணப்பட்ட வித்தியாசம் காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்ததுடன் அடுத் ஆண்டுகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## (இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 41,491,980 தொகைக்கான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உருத்துறுதி மற்றும் சாட்டுதல் பதிவேடு ஒன்று ஆரம்பிக்கப் பட்டு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எதிர்காலத்தில் அந்த பதிவேட்டை பரிசோதனை செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவு களுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடி க்கை எடுப்பேன். |
| (ஆ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/15 இலக்க மற்றும் 2007 மார்ச் 19 திகதிய கடிதம் | 2017 ஆண்டின் போது சபைக்கு சொந்தமான காணி கள் மற்றும் கட்டிடங்கள் மேற் கொள்ளப்பட்ட கணிப்பீட்டு சபையினால் வழங்கிய 9 பரிந்துரைகளையும் செயற்படு த்தியிருக்கவில்லை. | அறிவுரை கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இது தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தேன். |
| (இ) | 2010 ஆகஸ்ட் 17 திகதி PE/01/01 இலக்கங் கொண்ட மின் சக்தி மற்றும் வலு அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் வீதி விளக்குகள் பொருத்தியிருக்கா மையினால் சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட் டிருந்த ரூபா 472,415 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தற்போது பொருத்தப்பட் டுள்ள வீதி விளக்கு களின் எண்ணிக்கையை அங்கீகரிக்குமாறு மின்சார சபைக்கு அறிவித்ததுடன் இது வரையும் பதில் கிடைக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 112,566 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,270,045 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,163,483 | 1,170,105 | 1,325,754 | 546,711 | 1,036,500 | 1,364,486 | 1,228,368 | 702,360 |
| வாடகை | 3,694,250 | 2,328,555 | 2,561,282 | 1,137,035 | 2,841,900 | 4,834,421 | 4,700,800 | 1,369,762 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 142,250 | 127,685 | 154,910 | 97,675 | 135,250 | 145,412 | 145,412 | 124,900 |
| ஏனைய வருமானங்கள் | 31,470,680 | 27,863,514 | 21,505,934 | 11,471,504 | 27,740,000 | 27,231,041 | 28,991,239 | 5,113,924 |
| மொத்தம் | 36,470,663 | 31,489,859 | 25,547,880 | 13,252,925 | 31,753,650 | 33,575,360 | 35,065,819 | 7,310,946 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 470,759 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 463,881 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 934,640 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 503,788 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 430,852 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. ஆரம்ப நிலுவை மீதியில் அறவீடுகள் 48.1 சதவீதமாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வீதவரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | கொடுப்பனவு செய்யாத வீதவரி வாடகையாளர்களின் நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட செயற்பாடுகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 110,366 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டையிடலுடன் ரூபா 12,364 தொகை ஆகும். ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 6,871 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 115,859 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. மீளாய் வாண்டின் சிட்டையிடல்களில் அறவீடுகள் 15.2 சதவீதம் மற்றும் ஆரம்ப நிலுவையில் 4.5 தொகை அளவிலாகும். | நிலுவை ஏக்கர்வரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | ஏக்கர் வரி செலுத்தாத நபர்களுக்கு கடிதங்கள் மூலம் அறிவித்ததன் மூலம் மற்றும் வெளிக்கள பரிசோதனை மேற் கொண்டு தகவல் சரிசெய்த பின்னர் இந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 370,334 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 11,074,390 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்களில் ரூபா 1,000,000 தொகை தற்போது கிடைத்துள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

### 3.1.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்குவதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும். | 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2018 ஆண்டின் போது ரூபா 25,988 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச கட்டிடங்கள் ஆய்வு நிறுவனத்தின் 2016 ஜனவரி 13 திகதிய NBRO/LR/2MD/LIMT2016/31-1960 கடிதத்தின் மூலம் கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபைக்கு பின் பகுதியில் அமைந்துள்ள மண் மலை உறுதியற்றதாக காணப்படுவதால் மண்சரிவு ஏற்படும் ஆபத்து உடைய வலயத்தை சேர்ந்ததென பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திறந்த நிலையில் காணப்பட்ட வெட்டிய மலையினை தயாரித்து உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைகள் சமர்ப்பித்திருந்த போதிலும் 2019 ஏப்ரல் 10 திகதி வரை குறிப்பிட்ட கருமத்தை நிறைவேற்றி இருக்கவில்லை. | பரிந்துரையினை விரைவாக செயற்படுத்துவதற்கு செயற்பட வேண்டும். | பரிந்துரைகளை செயற்படுத்துவதற்காக நிதி மற்றும் தொழிநுட்ப உதவி வினவியுள்ளதுடன் மாற்றுவழி ஒன்றாக இனங்கண்ட 7 ஏக்கர் 3 ரூட் காணி ஒன்று கொள்வனவு செய்வதற்காக கடன்தொகை ஒன்று ஆளுனரிடம் வினவி உள்ளேன். |
| (ஆ) | 2014 ஆண்டின் போது சபைக்கு சாட்டப்பட்டிருந்த புஹுல்வெல்ல நீர்தொட்டி அமைந்துள்ள 03 பர்சஸ் காணியின் உரிமையை மற்றும் பெறுமதியை இனங்கண்டு உரித்தாக்களை முறைப்படுத்துவற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முறைசார் விதமான உரித்தாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். | இதற்கு தேவையான செறய்பாடுகள் விரைவாக மேற்கொள்வேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 02 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 06 மிகைப் பதவி யணியினை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் மிகை பதவி களை முறைப்ப டுத்துதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல் மேற்கொள்ளப்பட வேண்டும். | தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் தற்போது நிரப்பப்பட்டுள்ளதுடன் மீதியான ஆளணியை அங்கீகரிப்பதற் காக கௌரவ ஆளுனரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வாய்மொழி மூலம் அறிவித்துள்ளேன். |
| (ii) | அங்கீகரிக்கப்படாத பதவியணியை சேர்ந்த முன்பள்ளி பெண் பொறுப்பாளர் தொடர்பாக 2014 திசெம்பர் 12 திகதிய 25/2014 ஆம் இலக்கங் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் முகாமைத்துவச் சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்து பதவியணியை நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | முன்பள்ளி பெண் பொறுப்பாளர் பதவிக்கு அங்கீகாரம் பெறுவத ற்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்துக்கு அறிவித்தி ருந்த போதிலும் அந்த திணைக்களத்தினால் அங்கீ காரம் கிடைத்திருக்காததுடன் இது தொடர்பாக உள்ளூராட்சி திணைக்களத்திற்கு தகவல்கள் அனுப்பியுள்ளேன். |

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டிற்கான பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயந்திர உபகரணங் களின் ஆரம்ப பராமரிப்பிற்காக செலவிடு வதற்காக அங்கீகரிக்கப் பட்டிருந்த பணத்தில் ரூபா 893,400 தொகை பெறுமதியான 32 டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. தேவையினை இனங்காணாமல் கொள்வனவு செய்திருந்தமையால் ரூபா 784,500 தொகை பெறுமதியான 26 டயர்கள் 2019 ஏப்ரல் 10 திகதி வரை சபையில் களஞ்சியப் படுத்தப்பட்டு காணப்பட்டது. | தேவைக்கு ஏற்ப கொள்வனவு செய்ய வேண்டும். | 2108 ஆண்டின் போது குறிப்பிட்ட செயற்திட்ட ங்களில் இருந்து வாகனங்கள் அகற்றப்பட்ட காரணத்தினால் தேவை யான எண்ணிக்கை குறை வடைந்தது. கொள்வனவு செய்திருந்த டயர்களில் கணிசமான அளவு பயன் படுத்தப்பட்டதுடன் மேலும் ஒரு தொகை எதிர்கால த்தில் பயன்படுத்தக் கூடியவாறு மிகவும் பாதுகாப்பாக களஞ்சியப்ப டுத்தி வைக்கப்பட்டுள்ளது. |

### 3.5 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 01 ஏக்கர் 05 ரூட் 15.37 பர்சஸ் தொகையான 08 காணித் துண்டுகள் விளைவற்றுக் காணப்பட்டதுடன், 03 ஏக்கர் 01 ரூட் 1.1 பர்சஸ் கொண்ட 17 காணித் துண்டுகளின் எல்லைகளை அடையாளப்படுத்தி பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்த வேண்டும். | சபைக்குச் சொந்தமான 17 காணித் துண்டுகள் தொடர்பாக டென்டர் அழைக்கப்பட்டு குறுகியகால பயிர் விளைச்சலுக்காக குத்தகைக்கு கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | மக்கள் வங்கியின் இரண்டு நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 206,346 தொகை விளைவற்றுக் காணப்பட்டதுடன் சுமார் இரண்டு வருட காலம் இந்த கணக்குகள் விளைவற்றுக் காணப்பட்டது. | விளைவற்றுக் காணப்பட்ட காசு மீதி ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்தப் பட்டிருக்க வில்லை. | செயற்படாமல் காணப்படும் கணக்குகளை மூடுவதற்கு அங்கீகாரம் பெறுவதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் விண்ணப்பித்துள்ளேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 செலவு விடயங்களில் ரூபா 4,175,786 தொகை சேமிப்புக்களின் கூட்டுத்தொகை காணப்பட்டது. அப்பெறுமதிகள் 08 சதவீதம் முதல் 40.5 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடத்திற்காக தயாரிக்கப்படும் பாதீட்டு மதிப்பீட்டில் செலவு முரண்களை குறைத்து தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | 04 வருமான விடயங்களை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 5,264,661 தொகையாக இருந்ததுடன், அவை 3.9 சதவீதம் முதல் 37 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடத்திற்காக தயாரிக்கப்படும் பாதீட்டு மதிப்பீட்டில் வருமான விடயங்களுக்காக முரண்களை குறைத்து தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென்மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கத்தை பெற்றிருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் மாதாந்த கணக்காய்வு விடயங்கள் முன்னையவற்றை விட முறைப்படி மேற்கொள்வதற்கு செயற்படுத்துவதுடன் உள்ளகக் கணக்கின் மாதாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |